### மாநில அளவிலும், சர்வதேச அளவிலும் தமிழ்நாட்டு வீரர்கள் விளையாடி வெற்றிபெற்று

# தமிழ்நாட்டிற்கும் - இந்தியாவிற்கும் பெருமை தேடித்தர வேண்டும்!

## "முதலமைச்சர் கோப்பை - 2023" மாநில அளவிலான போட்டிகளை தொடங்கிவைத்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை, ஜூலை 1–**

**"முதலமைச்சர் கோப்பை – 2023" மாநில அளவிலான போட்டிகளை தொடங்கிவைத்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், நமது விளையாட்டு வீரர்கள் மாநில அளவிலும், சர்வதேச அளவிலும் விளையாடி வெற்றி பெற்று தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமைத் தேடித் தர வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.**

முதலமைச்சர் கோப்பை 2023 மாநில அளவிலான போட்டிகளை நேரு உள்விளையாட்டு அரங்கில் நேற்று தொடங்கி வைத்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உரை வருமாறு:-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் அரசு கூடுதல் தலைமை செயலாளர் அதுல்ய மிஸ்ரா அவர்களே, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி அவர்களே, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இங்கு வந்திருக்கக் கூடிய நம்முடைய விளையாட்டு வீரர் - வீராங்கனையரே, மாணவர்களே, அரசு ஊழியர்களே, பொதுமக்களே, மாற்றுத்திறனாளி சகோதர சகோதரிகளே, இந்திய ஒன்றியத்திலேயே எந்த மாநிலமும் நடத்திடாத வகையில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

38 மாவட்டங்கள். 15 விளையாட்டுப் போட்டிகள். 4 பிரிவுகள். 3 லட்சத்து 70 ஆயிரம் வீரர் - வீராங்கனையர். இப்படி தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட்ட முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளின் முக்கிய கட்டம் இது.

இந்த மாநில அளவிலான போட்டிகளை தலைநகர் சென்னையில் தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

விளையாட வாருங்கள் என்று ஒரு வார்த்தை தான் கூறினோம். இத்தனை லட்சம் வீரர் – வீராங்கனைகள் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றுள்ளீர்கள். இதற்கு காரணம் உங்கள் திறமை மீதும், நம்முடைய அரசின் மீதும் நீங்கள் வைத்திருக்கிற நம்பிக்கை தான். முக்கியமாக இந்தப் போட்டிகள், நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய பெயரில் நடைபெறுகிறது.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எப்படியான நிர்வாகத்திறனை பெற்றவர் என்பது தமிழ்நாட்டுக்கே தெரியும். அவர்களுடைய பெயரில் நடைபெறுகின்ற இந்தப் போட்டிகள், மிகச்சரியாகவும், நேர்மையாகவும் நடத்தப்பட்டு வருகின்றன என்பது உங்களுக்கு நன்றாகவே தெரியும்.

விளையாட்டு என்பது இந்த வயதினருக்குத்தான் அந்த வயதினருக்குத் தான் இவர்கள் மட்டும் தான் விளையாட வேண்டும் என்ற ஒரு விஷயம் கிடையாது. எப்படி கல்வியை யார் வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் பயிலலாமோ. அதைப்போல, விளையாட்டும் யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் விளையாடலாம்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.06.2023) சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் முதலமைச்சர் கோப்பை மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைத்து முதலமைச்சர் கோப்பையினை அறிமுகப்படுத்தினார்.

எனவே தான் பள்ளி , கல்லூரி மாணவ - மாணவியர், அரசு ஊழியர்கள், பொதுமக்கள், மாற்றுத்திறனாளிகள் என இந்தப்போட்டிகள் எல்லோரையும் உள்ளடக்கி நடத்தப்பட்டன.

முன்பெல்லாம் விளையாட்டு போட்டிகள் என்றால் மாணவர்கள் தயாராவார்கள். ஆசிரியர்கள் அவர்களுக்கு துணை நிற்பார்கள். இன்றைக்கு, ஆசிரியர்கள், மாணவர்கள் என இருவரும் மைதானத்திற்கு சென்று முதலமைச்சர் கோப்பை போட்டிகளுக்காக பயிற்சி மேற்கொண்டார்கள் என்பது சிறப்புக்குரிய மாற்றமாகும்.

இன்னொருபுறம் அரசு ஊழியர்களும் அதிகளவில் பங்கேற்றுள்ளீர்கள். கோப்புகள் ஆய்வு வேலை என்றிருந்த உங்களின் விளையாட்டு திறமைக்கு முதலமைச்சர் கோப்பை போட்டிகள் களம் அமைத்து கொடுத்திருக்கின்றன.

மாற்றுத்திறனாளி சகோதரி – சகோதரர்களும் நிறைய கலந்து கொண்டிருக்கிறீர்கள். மற்ற வீரர் - வீராங்கனையருக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுப்போமோ அதைவிட ஒருபடி அதிகமாகவே, உங்களுக்கு நம்முடைய கழக அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. தினசரி கோப்பைகளுடனும், பதக்கங்களுடனும் வருகிற மாற்றுத்திறனாளி சகோதர – சகோதரிகளை உரிமையுடன் சந்தித்து நம் வாழ்த்தை தெரிவித்து வருகிறோம்.

இப்படி எல்லா தரப்பையும் உள்ளடக்கி நேர்மையாகவும் – வெளிப்படையாகவும் இந்த விளையாட்டுப் போட்டிகளை நடத்தியதால் தான், இதற்கு மிகப்பெரிய அளவில் வரவேற்பை தந்தீர்கள். உங்கள் திறமையை வெளிப்படுத்துவதற்கான களமாக இந்தப் போட்டிகளை நீங்கள் எப்படி பார்த்தீர்களோ, அதேபோல தான், விளையாட்டுத்துறையில் புதிய புதிய திறமையாளர்களை அடையாளம் காண ஒரு வாய்ப்பாக இந்தப் போட்டிகளை நடத்தி வருகிறோம்.

விளையாட்டுப் போட்டிகள் என்பவை நகரங்களுக்கானவை மட்டுமல்ல. கிராமங்களிலும் ஏராளமான திறமைசாலி கள் இருக்கின்றனர். அவர்களுக்கு சரியான வாய்ப்பும், வழிகாட்டுவதற்கு உரிய வசதிகளும் இல்லை. அதனால் தான் தமிழ்நாட்டில் உள்ள 12 ஆயிரம் ஊராட்சிகளில் ஒன்று கூட விடுபட்டுவிடக்கூடாது என்று இந்தப்போட்டிகளை நடத்தினோம்.

**1 லட்சம் பேர் பங்கேற்றனர்!**

இன்றைக்கு சுமார் 27 ஆயிரத்து 411 பேர் மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்கவுள்ளீர்கள். இத்தனை லட்சம் பேர் பங்கேற்ற போட்டிகளில் இருந்து நீங்கள் வந்துள்ளீர்கள் என்றால் அது சாதாரண விஷயம் இல்லை. உங்கள் திறமை தான் இதற்கு காரணம். நீங்கள் இந்த மாநில அளவிலான போட்டிகளிலும் மிகப்பெரிய வெற்றியை பெறுவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. நீங்கள் பெறுகிற வெற்றி உங்களுக்கான வெற்றி மட்டுமில்லை. அது தமிழ்நாட்டுக்கான வெற்றி.

இந்தியாவிலேயே நம்பர் 1 கல்வியாளர்களை, நம்பர் 1 மருத்துவர்களை, நம்பர் 1 விஞ்ஞானிகளை, நம்பர் 1 வழக்கறிஞர்களை தமிழ்நாடு உருவாக்கியுள்ளது. இன்னும் உருவாக்கிக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் நம்பர் 1 விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டும் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறைக்கென தனி அமைச்சகத்தை 2006 ஆம் ஆண்டு உருவாக்கினார்கள்.

கல்வித்துறையுடன் இருந்த விளையாட்டுத்துறையை தனியாக பிரித்தது மட்டுமல்லாமல், விளையாட்டுக்கான கல்வியைத்தர வேண்டும் என்று தமிழ்நாடு விளையாட்டு மற்றும் உடற் கல்வியியல் பல்கலைக்கழகத்தை தொடங்கியதும் முத்தமிழறிஞர் அவர்கள் தான். அந்த அளவிற்கு கலைஞர் அவர்களுக்கு விளையாட்டுத்துறையின் மீது மிகுந்த ஆர்வம் உண்டு. உங்களுக்கெல்லாம் தெரியும், கிரிக்கெட் மீது கலைஞருக்கு தனிப்பிரியம் உண்டு. அவர் வழியில் வந்த நம்முடைய முதலமைச்சர் அவர்களும் விளையாட்டுத்துறையின் மீது பெரிய அளவில் ஈடுபாடு கொண்டவர். கலைஞர் அவர்களோடும் - நம் முதலமைச்சர் அவர்களோடும், கிரிக்கெட் விளையாடுகிற வாய்ப்பை பெற்ற நான், இன்றைக்கு விளையாட்டுத்துறைக்கே அமைச்சராக செயலாற்றுவதால், கலைஞர் அவர்களும், நம் முதலமைச்சர் அவர்களும் விளையாட்டுத் துறையில் எத்தகைய மாற்றங்களை கொண்டு வர நினைத்தார்கள் என்பதை மனதில் கொண்டு ஒவ்வொரு நாளும் செயல்பட்டு வருகிறோம்.

உங்களுக்கே தெரியும். கிட்டத்தட்ட 12 ஆண்டுகாலமாக நியமனம் செய்யப்படாமல் இருந்த பயிற்சியாளர்கள் (Coaches) நியமனத்தை மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொண்டோம். அதன் மூலம் 76 Coachesஐ முழுக்க முழுக்க Merit அடிப்படையில் நியமனம் செய்தோம். அதேபோலத்தான், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் செயல்பட்டு வரும், விளையாட்டு விடுதிகளுக்கும் திறமையின் அடிப்படையில் வெளிப்படையான முறையில், மாணவர்கள் சேர்க்கையை நடத்தி முடித்துள்ளோம். ஏழை - எளிய விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க வேண்டும். அவர்களுக்கு நிதியுதவிகளைச் செய்ய வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையை தொடங்கியுள்ளோம்.

தொடர்ச்சியாக ஸ்குவாஷ் உலக கோப்பையை அடுத்து, World Surfing League, Asian Cup Hockey ,உள்ளிட்ட பல சர்வதேச அளவிலான விளையாட்டு போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்தவுள்ளோம். இந்த துறைக்கு அமைச்சராக பொறுப்பேற்று வந்து 6 மாதங்கள் ஆகிவிட்டன. பெயர் தான் விளையாட்டுத் துறை. ஆனால், விளையாட்டாக கையாள முடியாத ஒரு துறை. ஏனென்றால், ஒரு துறையை நோக்கி பல லட்சம் பேர் கனவுகளோடும், தங்களின் திறமைக்கான அங்கீகாரம் வேண்டும் என்றும் உற்று நோக்குகிறார்கள் என்றால் அது விளை யாட்டுத் துறை தான். அதனால் தான் இதனை விளையாட்டாக எடுத்துக் கொள்ள முடியாது. குறிப்பாக லட்சக்கணக்கான விளையாட்டு வீரர்களின் கனவு - லட்சியத்தை சுமக்கின்ற - அந்த கனவை நினைவாக்கித் தருகிற துறையாக தான் நம் துறை உள்ளது. எனவே, நம்பர் 1 விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டும் என்ற முனைப்போடு தான் நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

**மாவட்ட, மண்டல அளவில் போட்டிகள்!**

அந்த வகையில் தான், ஓராண்டுக்கு முன்பு தான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தப் போட்டிகளுக்கான அறிவிப்பை வெளியிட்டார்கள். இன்றைக்கு மாவட்ட - மண்டல அளவிலான போட்டிகளை நடத்தி முடித்துள்ளோம். இந்தப் போட்டிகளை நடத்துவதற்காக சுமார் 50 கோடி அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்தோம். இதில், 27 கோடி ரூபாய் அளவுக்கு பரிசுப்பொருட்கள் மட்டுமே வழங்கப்படுகின்றன. முதல் பரிசு ரூ.50 ஆயிரம் முதல் ரூ.1 லட்சம் வரை. இரண்டாம் பரிசு ரூ.37 ஆயிரத்து 500 முதல் ரூ.75 ஆயிரம் வரை மூன்றாம் பரிசு ரூ.25 ஆயிரம் முதல் ரூ.50 ஆயிரம் வரை வழங்கப்படுகின்றன. இத்துடன் வெற்றிச் சான்றிதழ்களும், தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும் மற்றும் வீரன் உருவச் சின்ன பொம்மையும் வழங்கப்படவுள்ளன.

எந்த மாநிலமும், இப்படியொரு பிரம்மாண்டமான விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளை ஓர் ஆண்டு முழுவதும் நடத்தவில்லை. சென்னையில் 26 நாட்கள் நடைபெற இருக்கிற இந்த மாநில அளவிலான போட்டிகளில் 27 ஆயிரத்து 244 வீரர் வீராங்கனையர் பங்கேற்கவுள்ளனர். அதாவது 38 மாவட்டங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் முதல் இடம் பெற்ற 698 விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளும், 6 மண்டலங்களில் இருந்து 120 வீரர் வீராங்கனைகளும் மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளீர்கள். 5 ஆயிரத்துக்கும் அதிகமான பயிற்றுநர்கள், நடுவர்களுக்கென தங்கும் வசதி - போக்குவரத்து - உணவு வசதி என அனைத்து ஏற்பாடுகளையும் நம்முடைய கழக அரசு செய்துள்ளது. எனவே, இந்த மிகப்பெரிய வாய்ப்பினை நீங்கள் அனைவரும் சரியாக பயன்படுத்திக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

உங்களுடைய மாவட்டத்தில் தொடங்கிய வெற்றிப்பயணம், மாநில அளவிலும் தொடரட்டும். அதன் மூலம் சர்வதேச அரங்கில் விளையாட்டுத்துறையில் தமிழ்நாட்டுக்கும், இந்தியாவுக்கும் பெருமைத் தேடித்தர வேண்டும் என கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

---

### மருத்துவத்தில் பத்தாயிரம் பிள்ளைப் பேற்றுக்குத் துணைபுரிந்து

# ஓய்வுபெறும் செவிலித்தாய் கதீஜா பீவிக்கு பாராட்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் வாழ்த்து!

சென்னை, ஜூலை 1–

தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்புக்கும், அனைத்து மருத்துவப் பணியாளர்களின் பெருந்தொண்டுக்கும் அடையாளச் சின்னமாக திகழ்ந்தவர், பத்தாயிரம் பிள்ளைப் பேற்றுக்குத் துணை புரிந்து பல குடும்பங்களில் மகிழ்ச்சியை விதைத்த செவிலித்தாய் கதீஜா பீவி இன்று ஓய்வு பெறுவதையொட்டி அவருக்கு எனது பாராட்டும் வாழ்த்துகள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு வருமாறு :

**33 ஆண்டுகளுக்கு முன்பு தான் கருவுற்றிருந்த நிலையில் செவிலியராகப் பணிக்குச் சேர்ந்த கதீஜா பீவி அவர்கள், தனது பணிக்காலத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுகப்பிரசவங்களில் பங்களித்து இன்று ஓய்வு பெறுகிறார்.**

**தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்புக்கும் அனைத்து மருத்துவப் பணியாளர்களின் பெருந்தொண்டுக்கும் அடையாளச் சின்னமாக இவரது பணி அமைந்திருக்கிறது.**




**பத்தாயிரம் பிள்ளைப்பேற்றுக்குத் துணைபுரிந்து பல குடும்பங்களில் மகிழ்ச்சியை விதைத்த 'செவிலித்தாய்' கதீஜா பீவி அவர்களுக்கு எனது நன்றி கலந்த பாராட்டுகளைத் தெரிவித்து, அவரது ஓய்வுக்காலம் நிறைவானதாகத் திகழ்ந்திட வாழ்த்துகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நேற்று (30.6.2023) செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்படவுள்ள புதிய பேருந்து நிலையத்திற்கான இடத்தினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே. சேகர்பாபு ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர். இந்த ஆய்வின்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பாலாஜி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர.ராகுல்நாத், திருப்போரூர் ஒன்றிய குழுத் தலைவர் இதயவர்மன், திருப்போரூர் வேளாண்மை ஆத்மா குழுத்தலைவர் பையனூர் சேகர் , மாமல்லபுரம் பேரூராட்சித் தலைவர் திருமதி.வளர்மதி, தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு அச்சரப்பாக்கம் ஒன்றியம் பேரூர் தி.மு.க. சார்பில் 100 கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி கழகப் பொருளாளரும் நாடாளுமன்ற குழு தலைவருமான டி.ஆர்.பாலு சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ., காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் சி.வி.எம்.பி.எழிலரசன், எஸ்.ஆர்.ராஜா, மாவட்ட கழக நிர்வாகிகள் ச.இனிய அரசு, டிவி கோகுல கண்ணன், கு.மலர்விழி, சன் பிராண்ட் ஆறுமுகம், மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், காஞ்சிபுரம் மேயர் திருமதி மகாலட்சுமி, யுவராஜ், ஒன்றிய செயலாளர்கள் பி.எம்.குமார், கே.கண்ணன், ஜீ.தம்பு, எம்.எஸ்.சுகுமார், உள்ளிட்ட ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.